# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda<br>( URG MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 12.07.2021 | 125. இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் அமைந்துள்ள கரந்தை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் வகுப்பறையின் கூரையானது உட்புறம் கம்பி தெரியும் வகையில் பெயர்ந்து உள்ளது. மேலும் பள்ளிக்கட்டிடத்தில் பிளம்பிங் வேலைகள், மின் வயர்கள் புதிதாக மாற்றவும், வகுப்பறைகளுக்கு புதிதாக மின்விசிறி மாற்றவும் மற்றும் அனைத்து மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் இக்கட்டிடமானது பள்ளி கட்டிடம் என்பதால், குழந்தைகள் நலன் கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதனை சீரமைக்க அவசியமாக உள்ளதினை கருத்தில் கொண்டு மேற்படி பள்ளி கட்டிடங்களை சீரமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுதொகை ரூ.15,00,000/—ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.15,00,000/—ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2021—2022 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7480/2021/எம்சிஇ1) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 12.07.2021 | 126. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.29 கீழவாசல் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி கடந்த 15—வருடங்களாக செயல்பாட்டில் இல்லாமல் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. மேலும் இப்பள்ளி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சாலையோர நடைபாதை வியாபாரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக மேற்குறிப்பிட்ட இடத்தில் கடைகள் அமைக்கப்பட உள்ளது. மேற்படி பயன்பாட்டில் இல்லாத மாநகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் உள்ள பழுதடைந்த நிலையில் இருக்கும் கதவுகள், ஜன்னல்கள், மரச்சட்டங்கள் மற்றும் ஆஸ்பெட்டாஸ் ஷீட் போன்றவற்றினை உள்ளது உள்ளபடியே எடுத்துக்கொள்ளவும், மேற்படி வளாகத்தினை சுத்தப்படுத்தி தரும் பணிக்காகவும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் பணிகள் மேற்கொள்ள ரூ.25,000/—க்கு (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே, கீழவாசல் மாநகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடத்தினை இடித்து உள்ளது உள்ளபடியே தரைமட்டமாக்கி அப்புறப்படுத்தி தரும் பணிக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையில் பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான மதிப்பீடு ரூ.25,000/—ஐ (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.7560/2021/எம்சிஇ1) | |
| 12.07.2021 | 127. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான மேம்பாலம் குடிநீர் நீருந்து நிலையம் (பூஸ்டர்) உள்ளே அமைந்துள்ள இரண்டு நெட்லிங் மரங்கள் 23.06.2021 அன்று பெய்த மழைக்காற்றின் காரணமாக சாய்ந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததை சாலையின் ஓரத்தில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மரங்கள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் மரத்தை வெட்டி அப்புறப்படுத்த குறுகியகால பொது ஏலம் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.12935/2018/எம்சிஇ1) | அனுமதிக்கப்பட்டது |
| 12.07.2021 | 128. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.37ல் அமைந்துள்ள சாந்திவனம் எரிவாயு மயானத்தில், கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் பிரேதத்தினை தகனம் செய்திடும் பணியினை MOKSHA DWARA TRUST, CHENNAI என்ற அமைப்பு சேவை நோக்கத்தோடு கட்டணமில்லாமல் செயல்படுத்திட முன்வந்துள்ளது.<br>இதன்படி, பிரேத எரியூட்டுதல் கட்டணமாகிய ரூ.3500/—ஐ பொது மக்களிடமிருந்து வசூலிக்காமல் ஒவ்வொரு பிரேதத்திற்கும் உரிய எரியூட்டுதல் கட்டணம் ரூ.3500/—ஐ தங்களது MOKSHA DWARA TRUST, CHENNAI என்ற அமைப்பின் மூலம் இம்மாநகராட்சியில் செலுத்துவதாக தெரிவித்துள்ளது.<br>இதன்படி, கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரேதஙகளை தகனம் செய்யும் பணியினை கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பிரேதத்திற்கும் செலுத்தப்பட வேண்டிய எரியூட்டுதல் கட்டணம் ரூ.3500/—ஐ மேற்படி MOKSHA DWARA TRUST, CHENNAI என்ற நிறுவனத்தால் இம்மாநகராட்சிக்கு செலுத்துவதை அங்கீகரிக்கவும், சேவை நோக்கத்தோடு பணிகள் மேற்கொள்வதை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.4133/2020/எம்சிஇ4) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 12.07.2021 | 129. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் I வார்டு எண்.1 முதல் 13 வரையிலான பகுதிகளுக்கு உட்பட்ட சில தெருக்கள் மற்றும் பிரதான சாலைகளின் அணுகுசாலைகள் போன்றவற்றில் ஆங்காங்கே சாலை பழுதுகள் ஏற்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாத நிலை காணப்படுகிறது. இவற்றினை சரி செய்து சாலைகளை சீரமைத்து தரக்கோரி பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, மேற்படி மண்டலம் I வார்டு எண்.1 முதல் 13 வரையிலான பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைத்து தரும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/– (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8412/2020/எம்சிஇ4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 12.07.2021 | 130. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்–II வார்டு எண்.14 முதல் 26 வரையிலான பகுதிகளுக்கு உட்பட்ட சில தெருக்கள் மற்றும் பிரதான சாலைகளின் அணுகுசாலைகள் போன்றவற்றில் ஆங்காங்கே சாலை பழுதுகள் ஏற்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாத நிலை காணப்படுகிறது. இவற்றினை சரிசெய்து சாலைகளை சீரமைத்து தரக்கோரி பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, மேற்படி மண்டலம்–II வார்டு எண்.14 முதல் 26 வரையிலான பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைத்து தரும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/– (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8413/2020/எம்சிஇ4) | |
| 12.07.2021 | 131. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்–III வார்டு எண்.27 முதல் 34 வரை மற்றும் வார்டு எண்.43 முதல் 47 வரையிலான பகுதிகளுக்கு உட்பட்ட சில தெருக்கள் மற்றும் பிரதான சாலைகளின் அணுகுசாலைகள் போன்றவற்றில் ஆங்காங்கே சாலை பழுதுகள் ஏற்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாத நிலை காணப்படுகிறது. இவற்றினை சரிசெய்து சாலைகளை சீரமைத்து தரக்கோரி பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, மேற்படி மண்டலம் –III வார்டு எண்.27 முதல் 34 வரை மற்றும் வார்டு எண்.43 முதல் 47 வரையிலான பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைத்து தரும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/– (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8314/2020/எம்சிஇ4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 12.07.2021 | 132. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம் –IV வார்டு எண்.35 முதல் 42 வரை மற்றும் வார்டு எண்.48 முதல் 51 வரையிலான பகுதிகளுக்கு உட்பட்ட சில தெருக்கள் மற்றும் பிரதான சாலைகளின் அணுகுசாலைகள் போன்றவற்றில் ஆங்காங்கே சாலை பழுதுகள் ஏற்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லாத நிலை காணப்படுகிறது. இவற்றினை சரிசெய்து சாலைகளை சீரமைத்து தரக்கோரி பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, மேற்படி மண்டலம் –IV வார்டு எண்.35 முதல் 42 வரை மற்றும் வார்டு எண்.48 முதல் 51 வரையிலான பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீரமைத்து தரும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/– (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.8415/2020/எம்சிஇ4) | |
| 12.07.2021 | 133. | தஞ்சாவூர் மாநகராட்சி பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை நடைபெறும் இருட்டான பகுதிகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறான இருட்டான பகுதிகளை கண்டறிந்து புதிய தெருவிளக்கு அமைப்பதற்கு அம்ரூத் நிர்பயா திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம், சென்னை அலுவலக கடிதம் எண்.TUFIDCO/NIRBHAYA FUND/915/AM(B)/2019 நாள் 26.04.2021–ன்படி கோரப்பட்டிருந்தது. மேற்படி கடிதத்தில் வழிகாட்டுதலின்படி, ரூ.20.00/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு TUFIDCO அலுவலகத்திற்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம், சென்னை அலுவலக கடிதம் எண்.TUFIDCO/NIRBHAYA FUND/915/AM(B)/2019. நாள் 26.04.2021–ன்படி மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>0(ந.க.எண்.5919/2021/எம்சிஇ6) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 134. | தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் உள்ள தினசரி உருவாகும் மறு சுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தி மேலாண்மை செய்ய அனுமதி வழங்க கோரி Sr. Vice President-Mfg, The Ramco Cements Limited, Alathiyur Works, P.A.C.Ramasamy Raja Nagar, Cement Nagar (PO) Sendurai Taluk, Ariyalur District-621 730 என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கடிதத்திற்கிணங்க, இம்மாநகராட்சிக்குட்பட்ட 14 கோட்டங்களில் தினசரி துப்புரவு பணியாளர்களால் சேகரிக்கப்படும் மறு சுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை சம்பந்தப்பட் கோட்டங்களில் இருந்து தேவைக்கேற்ப மேற்படி நிறுவனத்தின் சொந்த செலவில் அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அன்னாருக்கு உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7485/2021/எச்8) | |

நாள் : 13.07.2021 ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
இடம்: தஞ்சாவூர். ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.